**C.C No. 91/2017**
**Date 18.11.2022**
**PW : 2**
**பெயர் - திரு.முத்துகுமார் த/பெ.**

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

சம்பவ காலத்தில் நான், வெள்ளபாண்டி, ராஜ்குமார், மகாலெட்சுமி ஆகியோர்கள் சேர்ந்து 1 முதல் 4 எதிரிகள் சகோதரர் மற்றும் 5வது எதிரியின் மகன் செல்வராஜ்யை வெட்டியதாக என் மீது வழக்கு உள்ளது என்றால் வழக்கு உள்ளது ஆனால் நாங்கள் எதுவும் செய்யவில்லை. நாங்கள் சம்பவத்தை கேள்விபட்டு தான் சம்பவ இடத்திற்கு வந்தேன். நான் சம்பவ இடத்திற்கும் வரும் போது கூட்டமாக இருந்தது என்றால் சரிதான்.

எதிரிகள் அ.சா.1 யை கம்பால் அடித்ததை நான் நேரடியாக பார்த்தேன். எதிரிகள் அ.சா.1 யை கூடி நின்று வேகமாக தாக்கினார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு சம்பவம் நடந்து போலிசார் ஒரு மணி நேரத்தில் வந்தார்கள். என்னை விசாரணை செய்தார்கள் எதிரிகளை விசாரணை செய்தார்களா என்று நான் பார்க்கவில்லை. சம்பவத்திற்கு பிறகு முத்துகிருஷ்ணன் எங்கு சென்றார் என்று எனக்கு தெரியாது.

சம்பவத்திற்கு மறுநாள் காலையில் முத்துகிருஷ்ணனை அவரது வீட்டிற்கு சென்று பார்க்கவில்லை. சம்பத்திற்கு பிறகு முத்துகிருஷ்ணனை வீட்டில் வைத்து தான் பார்த்தேன் ஆனால் எப்போது பார்த்தேன் என ஞாபகமில்லை. அ.சா.1 க்கு காலில் காயம் இருந்தது மற்ற காயங்கள் இருந்ததா என்று எனக்கு ஞாபகமில்லை அ.சா.1 க்கு காலில ஏற்பட்ட காயத்தினால் காலில் ரத்தம் வந்தது. சம்பவ நடந்தன்று போலிசார் விசாரணை செய்த பிறகு என்னை விசாரணை செய்யவில்லை.

சம்பவ இடத்தில் டிராக்டர் ஒரு நாள் முழுவதும் நின்றது அதை எடுக்க ஆள் இல்லை. சம்பவ இடத்திலிருந்து டிராக்டரை யார் எடுத்தார் என்று ஞாபகமில்லை அவர் பையன் தான் எடுத்திருப்பார். நான் சொல்வது போல் எந்த வழக்கு சம்பவமும் நடைபெறல்லை என்றும் எதிரிகள் அடித்து அ.சா.1 க்கு காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 1 முதல் 4 எதிரிகள் சகோதரர் மற்றும் 5வது எதிரியின் மகன் செல்வராஜ்யை வெட்டியதாக என் மீதும் வழக்கு உள்ளதால் அந்த முன்விரோதத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. அ.சா.1 தம்பி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

**C.C No. 91/2017**
**Date 18.11.2022**
**PW : 1**
**பெயர் - திரு.முத்துகிருஷ்ணன் த/பெ.**

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்பாக சரவணன் என் மீதும், கண்ணன் மீதும் புகார் அளித்து அதனடிப்படையில் நீதிமன்ற காவலுக்கு சென்று வெளியே வந்தேன் என்றால் அது எதிர் வழக்காகும் பாப்பான்குளம் கிராமத்தில் உள்ள நிலத்தில் என் குடும்பத்திற்கும் எதிரி குடுமபத்திற்கும் ஒரே கிணற்றில் தண்ணீர் எடுத்து வாய்கால் மூலம் வயலுக்கு எடுத்து செல்வதில் விரோதம் இருந்தது என்றால் சரிதான். பிரச்சனைக்குறிய கிணற்றில் மின் இணைப்பு அருமைதுரை நாடார் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான்.

தண்ணீர் பாய்ச்சும் போது நான் ஸ்டாட்டரையும், பீஸ் கேரியரை பிடிங்கியதாகவும் என் மீது சரவணன் விஜயநாராயணம் காவல்நிலையத்தில் வழக்கு கொடுத்தார் என்றால் சரிதான். முத்துகிருஷ்ணன், ஜெயலதா, மணிவாசகம் ஆகியோர்கள் சேர்ந்து அருமைதுரைநாடாரை அடித்ததாக வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான் அருமைதுரை என் மனைவியை வெட்டினார் அதனால் தடுத்தேன் தடுத்ததால் வழக்கு போடப்பட்டது.

சரவணன், அருமைதுரை என் சுமார் 12 வழக்கு கொடுத்துள்ளார்கள் என்றால் வழக்கு கொடுத்துள்ளார்கள் எத்தனை வழக்குகள் என்று தெரியாது நானும் நிறைய புகார் அளித்தேன். என்னை மூலைக்கரைப்பட்டி காவல்நிலைய டான் என்று தான் அழைப்பார்கள். ராஜீவ்காந்தி என்னை அசிங்கமாக பேசி, திட்டி, கல்லால் எனது வலது தலையில் அடித்ததாக போலிசார் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் அசிங்கமாக பேசி, திட்டி, கல்லால் எனது வலது காலில் அடித்ததாக தான் விசாரணையில் தெரிவித்துள்ளேன். கல்லால் அடித்ததில் எனக்கு ரத்த காயம் ஏற்படவில்லை வீக்க காயம் தான் ஏற்பட்டது.

எதிரிகள் உருட்டு கட்டையால் என்னை ஓங்கி அடித்தார்கள் என்றால் சரிதான். சரவணன், ஆறுமுக பெருமாள், தமிழ்செல்வன் ஆகியோர்கள் உருட்டு கட்டையால் தான் தாக்கினார்கள் என்றால் சரிதான். உருட்டு கட்டையால் தாக்கியதால் எனக்கு முதுகு மற்றும் தோள்பட்டையில் ரத்தகட்டுடன் வீக்கம் இருந்தது. எனக்கு ஏற்பட்ட வீக்க காயத்தையும் மருத்துவர் பார்த்து குறித்து கொண்டார் என்றால் சரிதான்.

சம்பவம் நடந்த தெருவிற்கும் காவல்நிலையத்திற்கும் சுமார் 15 கி.மீ தூரம் இருக்கும். மூலைக்கரைப்பட்டி அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் உள்ளது. நான் காவல்நிலையம் சென்று புகார் அளிக்கவில்லை நேரடியாக நான்குநேரி அரசு மருத்துமவனை தான் சிகிச்சைக்கு சென்றேன். நான்குநேரி மருத்துவமனையில் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை அளிக்காமல் ஐகிரவுண்ட் மருத்துவனைக்கு அனுப்பிவிட்டார்கள். நான்குநேரி மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க மறுத்ததற்கான காரணம் எனக்கு தெரியாது.

அருமைதுரை டிராக்டரில் இருந்து என்னை கீழே இழுத்தார் நான் கீழே விழுந்தேன் அதன்பின்பு எதிரிகள் என்னை கம்பால் அடித்தார்கள். கீழே விழுந்தவுடன் என்னை அ.சா.2 என்னை வீட்டிற்கு அழைத்து சென்றார் நான் நடந்து தான் வீட்டிற்கு சென்றேன். போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்களா என்றால் அங்கிருந்த மக்கள் தகவல் தெரிவித்து வந்தார்கள் ஆனால் நான் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன்.

நான் மருத்துவமனை சென்ற பின் போலிசார் சம்பவ இடம் வந்ததாக எனது மனைவி தெரிவித்தார். எனது மனைவி மருத்துவமனைக்கு என்னை பார்க்க மறுநாள் வந்தார். சம்பவத்திற்கு பிறகு நான் ஓட்டி வந்த டிராக்டர் எதிரி வீடு முன்பு தான் நின்றது. டிராக்டரை

சம்பவ இடத்திலிருந்து யார் அப்புறபடுத்தினார் என்று தெரியாது. நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது போலிசார் சுமார் 3, 4 நாட்கள் கழித்து தான் விசாரணைக்கு வந்தார்கள்.

மருத்துவமனையில் நடந்த விபரத்தை விசாரித்து கையெழுத்து வாங்கினார்கள். அதன்பிறகு இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் விசாரணை செய்யவில்லை நானும் காவல்நிலையம் செல்லவில்லை. ஒருவாரம் கழித்து எதிரிகளை கைது செய்து வரும் போது தான் நான் அளித்த புகார் மீது எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்த விபரம் தெரியும். மருத்துவமனையில் இருந்து முறையாக நான் வெளியே வந்தேனா என்றால் மருத்துவர் போக சொன்னதால் தான் நான் சென்றேன்.

எதிரிகள் 12 அடி ரோட்டை முழுமையாக கற்கள் வைத்து மறைத்திருந்தார்கள். எதிரிகள் வீட்டிலிருந்து எனது வீடு சுமார் 20 அடி தூரம் இருக்கும். மேற்படி பொதுவாக இருக்கும் பம்புசெட் எனக்கு தனியாக வேண்டும் என்று எதிரிகளிடம் கேட்டேனா என்றால் கேட்கவில்லை. ராஜீவ்காந்தி, ஆறுமுகபெருமாள், தமிழ்செல்வன் ஆகியோர்கள் கோவையில் தொழீல் செய்து வருகிறார்கள் என்றால்சரிதான் ஆனால் அப்அப்போ வருவார்கள். எதிரிகள் தகராறு செய்ததால் அங்கிருந்த மக்கள் எதிரிகளை பிடித்து சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான்.

நான் சொல்வது போல் வழக்கு சம்பவம் நடைபெறவிலை என்றும், அதனால் எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ராஜீவ்காந்தி, ஆறுமுகபெருமாள், தமிழ்செல்வன் ஆகியோர்கள் கோவிலில்வேலை செய்து வருகிறார்கள் என்றும் எதிரிகள் எந்த வழக்கு சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றும் சொத்தை எழுதிவிட வேண்டும் எண்ணத்தில் தான் எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

நான் நான்குநேரி அரசு மருத்துவமனைக்கு சென்றதும் அங்கும் சிகிச்சை அளிக்க மறுத்தார்கள் என்றால் சரியல்ல. எனக்கு எந்த காயம் இல்லையென்றும் காவல்நிலையத்தில் செல்வாக்கு உள்ளதால் நேரடியாக ஐகிரவுண்ட் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்று சொன்னால் சரியல்ல. என் புகாரின் மீது எதிரிகளை போலிசார் கைது செய்துவிட்டார் என்ற விபரம் தெரிந்ததும் தன்னிச்சையாக சிகிச்சையிலிருந்து வந்து தலைமறைவாகிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகளின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தான் பொய் புகார் அளித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**